பாராளுமன்றத்தில்

# பொன்னம்பலம் கந்தையா



# கம்யூனிஸ்ட் கட்சியின் மொழிக் கொள்கை

352.011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு: ஆகஸ்ட் 1ந் தேதி 1956—10,000
உரிமைப் பதிவு

தேசாபிமானி வெளியீடு—(3)
விலை சதம் 20

தேசாபிமானி காரியாலயம்,
91, கொட்டா ரோடு,
கொழும்பு—8

அச்சிட்டது:
லங்காபிரஸ்
கொழும்பு—8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11ந் தேதி ஜூன் மாதம் பருத்தித்துறை

## கம்யூனிஸ்ட் பாராளுமன்ற அங்கத்தவர் தோழர் பொ. கந்தையா

'தனிச் சிங்கள' மசோதாவை எதிர்த்து பாராளுமன்றத்தில் ஆற்றிய சொற்பொழிவு இது.

---

**சபாநாயகர் அவர்களே!**

இந்த மசோதாவை நான் எதிர்க்கிறேன்—வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இந்த மசோதா பற்றிய என் கருத்தை சமர்ப்பிப்பதற்கு முன், நான் அங்கம் வகிக்கும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மொழிக் கொள்கையை இங்கு விளக்க வேண்டியது அவசியமாகிறது. மாத்தறை பாராளுமன்ற அங்கத்தவர் திரு. மஹாநம சமரவீர கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை பற்றி திரித்துக்கூறிய விவாதங்கள் இதற்கொரு காரணமாகும்.

சபாநாயகரே, சில அரசியல் நாடோடிகளுக்கு, பச்சோந்திகளுக்கு அவர்களின் கடந்த காலத்தைப் பற்றி விளக்குவது சிரமமான காரியமாகும் அவர்களின் மனச்சாட்சி புதுமையான ரீதியில் வேலை செய்கிறது. இவர்களின் வேலையை நமக்கு ரசிக்க முடியாமல் இருக்கிறது. காரணம், உலகில் பச்சோந்திகள் கூட்டம் அதிகமாக பெருத்துவிடவில்லை. மாத்தறை அங்கத்தவரின் சொற்பொழிவை நான் கூர்மையாக கவனித்தேன். இந்த வேளையில் எனக்கு ஒன்றுமட்டும் துலாம்பரமாக விளங்கியது. அது தான் அவர் தனது பயித்தியக்காரத்தனத்துடன் போராடியது. அவர் தனது கடந்த கால வாழ்வை நிகழ் காலத்துடன் ஒப்பிட்டுக் காட்டி தனது பச்சோந்தித் தனத்துக்கு மூலாம் பூசினர். கடந்த கால கொள்கைகளை மறந்துவிட வேண்டுமென்பதுதான் அவரின் கருத்தாகும். சாக்கடைத் துணிகளை சந்தியில் வைத்து துவைப்பது போல, சிலரின் பழக்கச் சுபாவம் அவர்களின் படு பித்தலாட்டத்தனத்தை பகிரங்கத்தில் எடுத்துரைப்பது. இதில் அவர்களுக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையுணர்ச்சி; நமக்கோ பொறுக்கமுடியாத இகழ்ச்சி. இந்தமாதிரி சந்தியில் சென்று அழுக்குப்படிந்த தன் அரசியல்வாழ்வை மாத்தறை மந்திரி சொல்ல விரும்புவாராயின் அதற்கு நான் தடைக்கல்லாக இருக்கப்போவதில்லை. அவருக்கு அந்த உரிமை உண்டு.

கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை சந்தர்ப்பவாதமானது என்று மாத்தறை மந்திரி கூறினர். இந்த நாட்டின் மொழிகளைப் பற்றியும், மொழிக் கொள்கைகளைப் பற்றியும் கம்யூனிஸ்ட் கட்சி தவருன கொள்கையை கடைபிடிக்கிறதென அவர் கூறினர். இது சம்பந்தமாகக் கேள்விகளையும் அடுக்கினர். சென்ற ஆண்டில் ஜூலை மாதத்தில் யாழ்ப்பாண பாராளுமன்ற அங்கத்தவர் கொண்டுவந்த திருத்தப் பிரேரணைக்கு வாக்களித்ததாகவும் மாத்தறை அங்கத்தவர் கூறினர். இந்தசமயத்தில் திருத்தப் பிரேரணைக்குத்தான்வோட்டளித்தது தவறென்பதை அவர் உணர்ந்ததாகக் கூறினர். இந்தப் பிரேரணைக்கு வாக்களித்தபோது கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையும் தவருனதென்பதை இவர் உணர்ந்துள்ளார். என்றுலும் இந்தப் பேர்வழி இதன் பிறகும் 6 மாத காலங்கள் கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கம் வகித்துள்ளார். அதோடு, 6 மாதத்திற்குப்பின் மாத்தறை அர்பன் சபை தேர்தலிலும் கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகராக போட்டியிட்டுள்ளார்.

என் கட்சியின் மொழி சம்பந்தமான கொள்கையை ஏற்றுக்கொள்ளும்படி நான் இங்கு கெஞ்சப்போவதில்லை. இந்தப் பிரச்சினை எழுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே கம்யூனிஸ்ட் கட்சி தனது மொழிக்கொள்கையைப் பிரகடனப்படுத்தியுள்ளது. இந்த நாட்டின் உத்தியோக மொழிகளாக தமிழும்—சிங்களமும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பது என் கட்சியின் கொள்கை. அன்றும் இந்தக் கொள்கையைதான் பிரகடனப் படுத்தினேம், இன்றும் அதற்காகவே போராடுகிறோம். மாத்தறை அங்கத்தவர் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்த வேளையில்கூட கம்யூனிஸ்ட் கட்சி இதே கொள்கையையே பின்பற்றி வந்ததென்பதை அவர் அறிவார்.

**பீட்டர் கெனமன்:** அவர் அறிவார், இதே கொள்கைதான் இருந்ததென்பதை.........

**தோழர் கந்தையா** (தொடர்ந்து): ஒரு கம்யூனிஸ்ட் கட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்தவர் இலங்கை மக்களைப் பார்த்து, "உங்கள் மொழியைப் பாதுகாக்க வேண்டுமானால், சிங்களத்தை சாகாமல் தலைதூக்கச் செய்ய வேண்டுமானால், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்கு வாக்களியுங்கள்" என்று கூறுவதில் என்ன தப்பு இருக்கிறது. டாக்டர் விக்கிரம சிங்கா இப்படிக் கூறியிருப்பதென்றால் அது பூரணமாக சரி என்றே நான் கருதுகிறேன். நான் கூட பருத்தித்துறையில், "தமிழ் மொழியைப் பாதுகாக்க வேண்டுமானால், கம்யூனிஸ்ட் கட்சிக்கு வாக்களியுங்கள்" என்று அடிக்கடி கூறுவதுண்டு. இதற்கு காரணமென்ன? இந்த நாட்டிலுள்ள எல்லா மொழிகளையும், கலாச்சாரங்களையும் பாதுகாக்கக் கூடிய தகுதி கம்யூனிஸ்ட் கட்சிக்கே இருக்கிறது. உலக மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகி, எல்லா நாடுகளிலும் அந்தந்த நாட்டு மக்களின் மொழி, கலை, கலாச்சாரங்களைப் பாதுகாத்து வழிகாட்டியுள்ள ஒரே கட்சி கம்யூனிஸ்ட் கட்சியே என்பது இன்று நிதர்சன உண்மையாகிவிட்டது. டாக்டர் விக்ரமசிங்கா சிங்கள மொழியைக் காக்கப் போவதாகக் கூறி இருந்தால் அதில் தவறொன்றுமில்லை என்று மாத்தளை நண்பருக்குக் கூற வேண்டியவனாக இருக்கிறேன். டாக்டர் விக்ரமசிங்கா உண்மையில் அதைத்தான் செய்யப் போகிறார்.

மாத்தளை அங்கத்தவர் நமக்கு வாக்குறுதிகள் தந்தார். ஒரு பச்சோந்தியின் வார்த்தைகளை எப்படி நம்ப முடியும்? அவர்தான் தனது முகமூடியைக் கிழித்துக் காட்டி விட்டாரே!

நான் இந்த மசோதாவை எதிர்க்கிறேன். இந்த மசோதாவிற்கு நான் எதிர்ப்பு தெரிவிப்பது தமிழன் என்ற ரீதியில் மட்டுமல்ல. தமிழன் என்ற அடிப்படையில், எனக்கு நேசமாக இருப்பவைகளை இது பறித்து விடுகிறது என நான் கருதுகிறேன். எனது பண்டைய பெருமையை இந்த மசோதா மறுக்கிறது. எனது நிகழ்கால வாழ்வுக்கும் உலைவைக்கிறது. மாற்றம் எதுவுமின்றி இந்த படுபாதகமான மசோதா சர்க்கார் தஸ்தாவேஜிலேயே இருந்தால், எனது குழந்தைகளுக்கும், அவர்களின் சந்ததிகளுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது நீதி வழங்காது, அவர்களுக்கு உரிமையும் தாராது. இந்த மசோதாவின் மூலம், இந்த நாட்டின் நேர்மையான பிரஜைகளாய், சுதந்திரமாக வாழவும், ஜீவிதம் நடத்தவும் இந்த நாட்டுக்கு சொந்தமான தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை ஆட்சியினர் மறுக்கின்றனர். நாங்கள் வாழ்ந்த பெருமைகள் அத்தனையையும், நாங்கள் அருமையாக வாழ்வதையும், சிறப்புற எதிர்காலத்தில் நாங்கள் வாழ எண்ணியிருப்பதற்கும் சாவு மணி அடித்து, எங்கள் உரிமைகள் அத்தனையுமே இந்த மசோதா தட்டிக்கொண்டு போய் விடுகிறது.

இந்த மசோதாவில் குறிக்கப்படாத ஒன்றுண்டு. என்றும் எங்கள் தாய்மொழியை எங்கள் இல்லத்தில் பேசும் அந்த உரிமையையும் மறுத்துவிட இந்த மசோதாவின் பிரச்சார கர்த்தாக்கள் முயன்றால், எங்களிடமிருந்து பறிக்க வேறு உரிமைகளே இல்லாமல் போய்விடும். மனிதனிடமிருந்து மற்றொரு மனிதன் பறிக்க முடியுமான உரிமைகள் அவ்வளவுதான் உலகில் இருக்கின்றன.

இந்த அரசாங்கமோ அல்லது வேறு எந்த அரசாங்கமும், உலகத்திலுள்ள படுபாதகர்கள் கூட என்னை போஷித்த தந்தையுடன், என்னைப் பெற்றெடுத்து பாலூட்டி தாலாட்டிய என் அன்னையுடன் தாய்மொழியால் தமிழில் நான் பேசுவதை தடுக்க முடியாது. உதய கால புளகாங்கிதத்தையும், ஆனந்தப் பேருவகையையும், துன்பச்சுழலையும் தாங்கித்தேற என் மனைவி, எனது குழந்தைகளுக்கு, அன்னை மொழியாம் தமிழில் மொழி அமுதூட்டுவதை எந்த சக்தியாலும் தடை செய்ய முடியாது. எனக்கு சொந்தமான மொழியை நான் பாவிப்பதை எவராலும், ஆயிரம் சட்டங்களாலும் நிறுத்த முடியாது. இந்த உரிமையில் இன்று தகராறில்லை. இன்றுள்ள தகராறு, அரசாங்க நிர்வாகத்திலும், வர்த்தகப் பரிவர்த்தனையிலும் இந்நாட்டின் பிரஜையென்ற காரணத்தினால் என் தாய்மொழியை உபயோகிக்க எனக்குள்ள உரிமை இங்கு மறுக்கப்பட்டிருக்கிறது. எனது மொழிக்கு உரிமை மறுப்பது மூலம், தமிழ் தேசிய இனத்தைச் சேர்ந்தவன் என்ற ரீதியில் எனக்குள்ள, எனக்கிருக்கவேண்டிய எல்லாவற்றிற்குமே நீங்கள் சாவு மணி அடிக்கிறீர்கள். உங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சிந்தனையின் வேகம்' உங்கள் 'புத்தி கூர்மையின் முடிவு' இந்த தீர்மானத்தை எனக்கு முன்னும், என் மக்கள் முன்பும் வைத்திருக்கிறது. நாங்கள் எங்கள் வாழ்வை 'வாழி'பாடி விடவேண்டும், இந்தநாட்டில் நாங்கள் இருப்பதே இல்லாமல் ஒழிந்துபோக வேண்டும். இது தான் உங்கள் முடிவு. நீதியின் நாமம் கொண்டு, நேர்மையான காரணம் கொண்டு எங்களை அழிக்க உங்களுக்கு உரிமையில்லை. உங்களிடமுள்ள உயர் தர ஆயுதங்களைக் கொண்டு, சக்தியைக் கொண்டு என்னைச் சேர்ந்த மக்களை இந்த மாண்புமிக்க நாட்டிலிருந்து தொலைத்துக் கட்ட நீங்கள் முயற்சிக்கிறீர்கள். உயிருக்குயிரான, ஜீவியத்தின் ஜீவனான மொழியை பறிக்கப் பார்க்கும் சக்திகளை எந்த நாட்டு மக்களும், எளிமைப்பட்டவர்கள் கூட எதிர்த்துப்போராடி இருக்கிறார்கள்—போராடுவார்கள்.

சர்க்கார் தரப்பினர் இந்த சபையின் முன் சமர்ப்பித்த வாதங்களை பரிசீலனை செய்தேன். இந்த மசோதாவில் அநீதியானவை ஒன்றுமே இல்லையாம். அநீதியானவை தப்பித்தவறி இருந்தாலும், அவை அமுலில் வராதாம்—அவை அநீதியாகவும் இராதாம். இந்த மன்னிப்பு பாவனைகளைப்பற்றி நான் சில நிமிடங்களில் எடுத்துக்கூறுவேன்.

நான் ஒரு கம்யூனிஸ்ட். ஒரு கம்யூனிஸ்ட்டாக இருப்பதில் பெருமைப்படுகிறேன். எங்கள் கட்சி, இன்றைய சமூக, பொருளாதார விதிகளினால் நசுக்கப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு, சுரண்டப்பட்டு வாழும் பெருவாரி மக்களைக்கொண்டதாக மிளிர்கிறது. சுரண்டலிலும், சண்டாளப் பாதகங்களிலும் கட்டப்பட்ட அநீத சமூகங்கள், வாழ்விலே வளமில்லாமல், வறுமைக்கு விடிவில்லாமல் பஞ்சையாய், பராரிகளாய், பட்டினிகளாய் வாழ்ந்து மடியும் ஆயிரமாயிரம் அப்பாவி ஜீவன்களுக்கு வழி சொல்லாமல் இருக்கின்றன. இந்த சமூக கொடுமைகளினாலே கட்டப்பட்ட இச்சமூகங்கள் இவைப்பற்றி அறியாமல் இருக்கின்றன. எனவே, இவைகளை அகற்றவும், ஒழிக்கவும் வழியில்லை. வாழ்வில்லாமல் தினசரி தவிக்கும் அந்தப் பெரும்பான்மை மக்களின் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி. அரசியல், சமூக பொருளாதார எல்லாக்கோணங்களிலும் இந்த ஏழை மக்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வளிக்க — அவர்களுக்கு உரிமை அளிக்கப் போராடி வருகிறது. எந்த ரீதியில், எந்த ரூபத்தில் தலைதூக்கினுலும், அடிமைத்தனத்துக்கு கம்யூனிஸ்ட் கட்சி இடந்தரப்போவதில்லை. அடிமைத்தனை அறுப்பதே கம்யூனிஸ்ட் கட்சியின் லட்சியமாகும். எங்கள் அரசியல் தத்துவத்தின் இந்த அடிப்படைக் காரணத்தினுலேயே கம்யூனிஸ்ட் கட்சியினராகிய நாங்கள் இந்த மசோதாவை இத்தனை வன்மையாகக் கண்டிக்கிறேம் — எதிர்க்கிறேம். தங்கள் மொழியை உபயோகிப்பதற்கு, தங்கள் மொழியினுல் தங்களை ஆட்சிபுரிவதற்கும், தங்கள் மொழியையும், கலாச்சாரத்தையும் வளர்க்கவும் இந்த நாட்டிலுள்ள எல்லா தேசிய இனங்களுக்கும் மறுக்க முடியாத, இயற்கையிலேயே கிடைக்கப்பெற்ற பரிபூரண உரிமை உண்டு என நாங்கள் கருதுகிறேம். இந்த உரிமை கூடுதல் குறைவின்றி எல்லா மொழிபேசும் பகுதி மக்களுக்கும் உண்டு. எந்த மொழியையும் உயர்தர ஸ்தானத்திலும், அதற்குக் கீழ் வேறுமொழிகளையும் வைத்திருப்பது முற்றும் தவறுனதாகும்.

இந்த முடிவுப்படி இந்த நாட்டின் சர்க்கார் நிர்வாகத்தில் எல்லா மொழி பேசும் இனத்தைச் சேர்ந்தவர்களும் சம நிலை அடைவார்கள் என்பதில், சர்க்காரில் சமபங்கு இவர்கள் அத்தனை பேருக்கும் வழங்க வேண்டும் என்பதல்ல இதன் அர்த்தம். இந்த நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்கள் பகுதி அத்தனைக்கும் இந்த மசோதா உரிமை மறுக்கிறது. அடிமைத்தனத்திலும், அடக்குமுறையிலும் பூரண எதிர்ப்புடையவர்களான நாங்கள், ஒரு இனத்தின் உரிமைக்கே உலைவைக்கும் இந்த மசோதாவை எதிர்க்கிறேம். இந்த மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவிப்பது மட்டுமல்லாமல் இதன் விதிகளை எதிர்த்தும், நடைமுறையில் அமுல் நடத்துவதை எதிர்த்தும் நாங்கள் வேலை செய்வோம்.

கடந்த ஜூன் மாதம் நடந்த இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் காங்கிரஸில், மற்ற முக்கிய பிரச்சினைகளுடன் மொழிப்பிரச்சினை சம்பந்தமான கீழ் வரும் பிரேரணையும் நிறைவேற்றப்பட்டது. இங்கிருக்கும் மாத்தரை பாராளுமன்ற அங்கத்தவர் கூட அவ்வேளையில் இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்ததை நான் அறிவேன். பிரேரணை இதோ:-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிங்களமும் தமிழும் உத்தியோக மொழிகளாக, உடனடியாக இலங்கைச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரவேண்டுமென்று இக்காங்கிரஸ் கோருகிறது. கல்வித்துறையில் எல்லாத் தரத்திலும் சிங்களமும் தமிழும் போதனு மொழிகளாக்கப்பட வேண்டுமென்று கோருகிறோம். பொது ஸ்தலங்களும், பொது மக்களுடன் நெருங்கின சம்பந்தம் கொள்ளும் பகுதிகளான அரசாங்க, ஸ்தல ஸ்தாபன சட்டக், கோர்ட்கள் ஆகியவை களில் உடனடியாக சுயபாஷைகள் அமுல் நடத்தப்பட வேண்டும். இந்த நடவடிக்கைகள் அனைத்தையுமே சிங்கள, தமிழ் மொழிகளின் மூலம் நடத்தலாம் என இக்காங்கிரஸ் நிச்சயப்படுத்திக் கூறுகிறது. உடனடி மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கும், சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளை உடனடியாக அறிமுகப்படுத்துவது அத்தியாவசியம். இதுவே இந்த மாற்றத்திற்கு உறுதியளிக்கக் கூடிய ஒரே மார்க்கம்..."

கடந்த ஜூன் மாதத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி நிறைவேற்றிய பிரேரணையின் ஒரு பகுதிதான் மேலே நான் குறிப்பிட்டது.

நான் கூறியவை உலகெங்கு முள்ள கம்யூனிஸ்ட்களின் கொள்கையாகும். எண்ணற்ற பல நாடுகளில், இந்த அடிப்படைத் திட்டத்திலேயே சமூக ஜன நாயகங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த நாடுகளில், சட்டத்தின் பார்வையிலே லட்சக்கணக்கான மக்களைக்கொண்ட சிறுபான்மை இனங்களுக்கும், வேறுபட்ட மொழிபேசும் பல பகுதியினருக்கும் சுதந்திரமாக வாழவும், சந்தோஷமாக ஜிவிதம் நடத்தவும் பூரண சமத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. இவைகளுக்கான உத்திரவாதமும் அளிக்கப்பட்டிருக்கிறது. சிறுபான்மை இனங்களின் உரிமைகள் சம்பந்தமான பிரச்சினையில் நாங்கள் இந்த கருத்தைப் பின்பற்றுவது மூலம், எனது சிந்தனையில் ஒரு சிறுதளவாவது சந்தேகத்தின் நிழலாட்டம் இல்லாத ரீதியில், நாங்கள் நேர்மையான, தகுதியான, ஜனநாயக ரீதியான ஒரே கொள்கையை கடைப் பிடிக்கிறோம் என்று என்னல் சொல்ல முடிகிறது.

இன்றைய இனவெறியின் உச்சக்கட்டத்தில், திட்டமிடப்பட்ட இனக்குரோத வளர்ச்சி சிலரின் உள்ளத்தில் ஊடுருவச் செய்யப்பட்ட இவ்வேளையில், முற்போக்கான, உண்மையான தேசாபிமான,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயக கருத்துக்கு மரியாதை செய்யும் சிங்களமக்களின் பகுதி சக்தியற்றிருக்கிறது என்று கூறுவது புதுமையில்லை. இத்தனை இனவெறிக் கூப்பாட்டிற்கும் அசைந்து கொடுக்காத நேர்மையான எண்ணம் கொண்ட சிங்கள மக்கள் இருப்பதுதான் புதுமையாகும்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினதும், இடதுசாரி இயக்கத்தினதும் அரசியல் அத்திவாரத்தின் அடிப்படையிலேயே இதை நான் பிரஸ்தாபிக்கிறேன். காரணம்? இந்த சபையின் முன்னும், இந்த நாட்டிலுள்ள மக்கள் சமாஜத்தின் முன்னும், ஒரு முக்கியமான, அதிமுக்கியமானதென நான் கருதும் ஒரு முறைப்பாட்டை சமர்ப்பிக்க வேண்டியவனுக இருக்கிறேன். கடந்த வாரத்தில் எனது வட்டாரத்தில் நடந்த ஒரு உபாத்தியாயர்கள் கூட்டத்திலும் நான் இதை குறிப்பிட்டேன். நம்பிக்கையின்றித் துயரப்படும் கருத்துக்கும், வேண்டாத முறைப்பாட்டில் நாட்டை துண்டாடும் வாதங்களுக்கும் எதிராக நான் அவர்களுக்கு கூறினேன். இலங்கை சரித்திரத்தின் இருண்ட காலமொன்றில் நாம் வாழ்கிறோம். நாம் இன்று காணும் அநீதங்களுக்கு எதிராகப் போராடுவோம். ஆனல், எந்தக் காரணத்தைக் கொண்டும், தேசிய கண்ணேட்டத்தை மறந்து இனவெறிப்பாதையில், பிரித்தாளவும் துண்டாடவும் வழிநீட்டும் பாதையில் அடியெடுத்து வைக்கக்கூடாது. துண்டாடும் கொள்கை நம்மை பெரிதும் தாக்கி கேடு விளைப்பது போன்று, சிங்கள மக்கள் பகுதியினர் பெரும்பான்மையினருக்கும் கெடுதி பயக்கும். நாம் இலங்கை தாயகத்தின் ஒரு பகுதியினர். அதன் வளர்ச்சியில் வாழ்ந்து வளமுறுபவர்கள். தாராள மனப்பான்மை கொண்ட சிங்கள மக்களைவிட்டும் பிரிந்த ஒரு வாழ்வு நமக்கு இல்லை. இன்று நடைபெறும் அக்கிரமங்களும், அநியாயங்களும் துஷ்டகுணம்படைத்த, குறுகிய மனம்படைத்த, கொள்ளைவெறிகொண்ட,பின்புறம்நோக்கும் கொடும் பாதகர்களான ஒரு பகுதி சிங்கள இனவெறிக்கூட்டத்தினல் செய்யப்படுகிறது. நியாய புத்தியுள்ள, முன்னேற்ற வழிநோக்கும், முற்போக்கு எண்ணமுள்ள சிங்கள தேசாபிமானிகளின் பகுதியினரல்ல இவர்கள். உண்மையான தேசாபிமானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் பிரதிநிதிகளாக இந்த வெறியர்கள் எப்போதும் ஆகமுடியாது. நாம் அளவிடும் காலத்தைவிட அதிசீக்கிரத்திலேயே தேசிய ஐக்கியத்திற்காகப் போராடும் நேர்மை கொள்கைகொண்ட சிங்கள தேசாபிமானிகளின் கை வலுக்கும், அவர்கள் வெற்றிக் கொடி நாட்டுவார்கள் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை தென்பகுதியில் அரசியல் மேடையில் இனவெறிப் பிண்டங்களான மேத்தானனந்தாக்களும், ஜெயசூரியாக்களும் இருந்த போதிலும், தமிழ் மக்களின் பதில் இனவேற்றுமையாக இருக்கக் கூடாது, சிங்கள இனவெறித் தலைவர்களையொத்த தலைவர்களை தமிழ் பகுதிகளிலும் பின்பற்றுவதிலல்ல இதன் மறுமொழி அடங்கிக்கிடக்கிறது.சகோதரத்துவத்திற்கும், பரஸ்பர அறிமுகத்திற்கும், நேசபாவத்திற்கும் உரிய, தேசாபிமானமிக்க ஜனநாயகத்திற்கு மதிப்புத்தரும் பேச்சாளர்களை, தலைவர்களை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்; குறுகிய மனம் படைத்த இனவெறிச் சிங்களத் தலைவர்களையல்ல!

தமிழ் மக்களுக்கு நீதியும், தேசிய வாழ்வும் அளிக்க இவ்வாட்சி தவறினல், இலங்கையில் ஒரு ஜனநாயக சமுதாயத்தை நிறுவும் முற்போக்கு அரசாங்கமொன்றை அமைக்க நம் மக்கள் முயலவேண்டும். இனவெறியற்ற. தேசிய ஒற்றுமையின் ஒளியாகத் துலங்கி பொருளாதார நல் வாழ்வு, சுகவாழ்வளிக்கும் மணிமகுடமாக அது பரிமளிக்க வேண்டும்.

தமிழ் மக்கள் தளர்ச்சியும், கோபமும் அடையும் வேளையல்ல இது. பொறுமையின் பெட்டகமாக இருந்து நீதி வழங்கும் நல்லாட்சி அமைக்க வேண்டியது அவர்களின் பொறுப்பாகும் எந்த காரணத்தைக் கொண்டும் தமிழ் மக்கள் பிரிவினை கோரும் நீதியில் சிந்திக்கக் கூடாது. அதற்கு மாருக, சிங்கள மக்களுடன் கைகோர்த்து ஐக்கிய இலங்கையை வளர்க்கும் வகையில் வழி தீட்டவேண்டும். என் தொகுதியிலுள்ள ஆசிரிய நண்பர்களுக்கு அன்று நான் சொன்னேன், தேசிய ஐக்கியத்தை பாதுகாக்கவல்ல ஒரே பகுதி இடதுசாரி அரசியல் கட்சிகளே. ஈழத்தின் ஒற்றுமைத் தீபமேற்றிகள் இவர்கள்தான். இந்த நாட்டில் இரண்டு தேசிய கட்சிகளே இருக்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றன. ஒன்று கம்யூனிஸ்ட் கட்சி, மற்றது சமசமாஜ கட்சி. மற்ற கட்சிகள் எல்லாம் தங்கள் தேசிய குணும்சத்தை உதறித் தள்ளிவிட்டு, பகுதி அரசியல் அல்லது இனக் கட்சிகளாக மாறி இருக்கின்றன.

பருத்தித்துறை உபாத்தியாயர்களுக்கு நான் இவைகளைத்தான் கூறினேன். இந்த சபையிலுள்ளவர்களுக்கும் அதையே நான் கூறுகிறேன். அதோடு, தமிழ் பேசும் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் எல்லா மக்கள் பகுதியினருக்கும் நான் இந்த கருத்துக்களை அழுத்தமாகச் சொல்லவேண்டியவனுக இருக்கிறேன்.

இந்த நாட்டில் சிங்களத்துடன் சம அந்தஸ்துபெற தமிழ் மொழிஉத்தியோகமொழியாக அங்கீகரிக்கப்பட வேண்டியதற்கான அவசியத்தை எனக்கு முன் பேசியவர்கள் தீர்க்கமாக விளக்கியுள்ளனர். செனட்டர் எஸ். நடேசனும், யாழ்ப்பாணப் பிரதிநிதியும் (திருவாளர் ஜி. ஜி பொன்னம்பலமும்) இது பற்றி நீண்ட விளக்கங்கள் தந்தார்கள். அவர்கள் சமர்ப்பித்த விளக்கங்களை நான் பூரணமாக ஏற்றுக்கொள்கிறேன். தமிழ் பேசும் மக்களின் மேல் சிங்களம் திணிப்பதற்கு எதிராக போதியளவு வாக்குவாதங்கள் நடைபெற்றுவிட்டன. அதைத் தொடர்ந்து நடத்தவேண்டிய அவசியம் எனக்கு ஏற்படவில்லை. எனக்கு முன்னே அமர்ந்திருக்கும் அரசாங்கப் பிரதிநிதிகள் நம்முன் மசோதாவை வைத்து நீதிக்கு முரணுன இத்திட்டத்திற்கு ஆதாரவாகப் பரிகசிக்கத்தக்க முறையில் வாதம் நடத்தியதிலிருந்து நமது ஆணித்தரமான விளக்கங்கள் எவ்வித பிரயோஜனமும் இங்கு தாராதென நான் எண்ண வேண்டியவனுக இருக்கிறேன். இவர்களுக்குரிய பதில் நவீன வரலாற்றிலேயே காணக்கிடக்கிறது.

இந்த நூற்ருண்டில், அடிமைப்பட்டுக்கிடந்த பல நாடுகள் அரசியல் சுதந்திரம் பெற்றிருக்கின்றன. மற்றும் பல நாடுகள் அரசியல் சுதந்திரம் பெறுவதற்கான வழியில் வெற்றிநடை போடுகின்றன. இந்த நாடுகள் சிலவற்றிலும் பல்வேறு மொழிவாரிப்பகுதியினர் வாழ்கின்றனர். என்றுலும், எந்த நாட்டிலும் ஒரு மொழி உத்தியோக மொழியாக்கப்பட்டு, மற்ற மொழி பேசும் பகுதிகளை அடக்கியுள்ளது என்று கூறுவதற்

கில்லை. சுதந்திரம் பெற்ற நாடுகளும், சுதந்திரம் பெறப் போகும் நாடுகளும் கூட இந்த அநீதத்தை செய்ய முற்படவில்லை.

**சி. சுந்தரலிங்கம்:**

*முற்றிலும் சரி*

**பொ. கந்தையா;**

பல்வேறு மொழிவாரிப் பகுதியினர்களைக் கொண்ட இந்த நாடுகளில் எல்லாமொழிகளுக்கும் உத்தியோக சமநிலை அளிக்கப்பட்டிருக்கிறது, குறிப்பாக இந்தியா, பாக்கிஸ்தான், மலாயா, கென் ஆப்பிரிக்கா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் இந்த நிலையை நாம் தெளிவுறக் காணலாம். நான் இங்கு எடுத்தியம்பும் கருத்துக்களுக்கு அனுசரணையாக அமைந்திருக்கிறது பாக்கிஸ்தான் பிரதமரின் சமீபத்திய சொற்பொழிவு. சிறப்பான முறையில் அவர் இதற்கு விளக்கம் தருகிறார். அவர் பாக்கிஸ்தான் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையை நான் இங்கு வாசிக்கிறேன்:-

"பாக்கிஸ்தானின் உத்தியோக மொழிகளாக வங்காளமும், உர்துவும் ஆக்கப்படுவதற்கான பிரேரணையின் முக்கியத்துவத்தை இந்த சபையினர் உணர வேண்டும். உர்துவுக்கும், வங்க மொழிக்கும் சமத்துவம் அளிப்பதே இதன் நோக்கமாகும். இதே நேரத்தில் மாகாண மொழிகளின் நிலைகளும் பாதுகாக்கப்படும்"

வங்காளமும், உர்துவும் உத்தியோக மொழிகளின் ஸ்தானத்தைப் பெற்ற பின்பு, மற்ற மொழிகளின் கதி என்ன? என்ற கேள்விக்கும் பாக்கிஸ்தான் பிரதமர் பதிலளிக்கிறார்:-

"நாட்டின் அதிபதி, குறிப்பிட்ட மாகாண சட்டசபைகளின் சிபாரிசின்பேரில், அந்த மாகாணத்தின் மொழியை குடியரசின் உத்தியோக மொழிகளின் ஸ்தானத்திற்கு உயர்த்த சட்டம் இடமளிக்கிறது. மத்திய அரசாங்க சேவைகளுக்குரிய பரீட்சைகளில் எல்லா மாகாண மொழிகளும், மாகாண மொழியல்லாத உர்துவும் கூட சமநிலை பெறுகிறது."

சமீபத்தில் சுதந்திரம் அடைந்த நாடுகளைப்பற்றியும் அரசியல் சுதந்திரம் அடையும் நிலையிலிருக்கும் நாடுகளைப் பற்றியும் நான் இப்பொழுது எடுத்துக்கூறினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே நூற்றாண்டில் மற்றும் பல நாடுகள், சுரண்டும் பழமைப்பட்ட முதலாளித்துவ முறையை பூரணமாக ஒழித்துக்கட்டிவிட்டு, ஜனநாயகம், சோஷலிஸம் ஆகியவைகளின் அடிப்படையில் புதிய சமுதாயங்கள் கட்டியிருக்கின்றன. வருங்கால புது உலகை, பொன் யுகத்தை அவர்கள் கட்டிவிட்டுள்ளார்கள் என நான் கருதுகிறேன். இந்த புதுவாழ்வு மலர்ந்த நாடுகளில், குறிப்பாக ருஷ்யா, சீனு, செக்கஸ்லோவேக்கியா, யூகோஸ்லேவியா ஆகிய நாடுகளில் பல்வேறு மொழி பேசும் இனங்கள் வாழ்கின்றன. இந்த நாடுகள் அனைத்திலும் எல்லா தேசிய மொழிகளுக்கும் உத்தியோக மொழிகளுக்குரிய சம அந்தஸ்து அளிக்கப்பட்டிருக்கிறது. உத்தியோக சமநிலை மறுக்கப்பட்டு துன்புறுத்தப்பட்ட மொழிவாரி இனங்களோ, மொழிகளோ ஒன்று கூட இல்லை என்பதை சர்க்கார் தரப்பினர் நன்கு அறிவார்கள் என்று நாம் எண்ணுகிறேன். நமக்குக் கிடைக்கும் எண்ணரிய ஆதாரங்களைக் கொண்டு நாம் கணித்தால், இந்த நாடுகளில் சிறிது, பெரிதென்றில்லாமல், எல்லா மொழிகளுமே வளர்க்கப்படுகின்றன. உத்தியோக மொழிகளாக மிகச் சிறுபான்மை இனங்களின் மொழிகள் கூட அந்தஸ்து பெற்று சிறப்பாக முன்னேறுகின்றன. இவைகள் எல்லாம் பெரும்பான்மை மொழிபேசும் மக்களின் உறுதுணையுடனேயே நடைபெற்று வருகின்றன.

இந்த நிலை ஏற்படக் காரணமென்ன? இதற்கொரு காரணமுண்டு. இந்த நாடுகள் அனைத்தும் நெடுங்காலமாக பொருளாதாரத்தில் அல்லது அரசியலில், பெரும்பாலும் இரண்டு வகையிலும் அடிமைப்படுத்தப்பட்டிருந்தநாடுகள். அடிமைத்தனை அறுக்க அவர்கள் நடத்திய போராட்டங்களில், அடிப்படை ஜனநாயக விதிகள் அனைத்திற்கும் மதிப்பும், மரியாதையும் தரும் நிலையை உருவகப்படுத்திக் கொண்டார்கள். இந்த அடிப்படையில் பல்வேறு ஜாதிகளிடையேயும், மொழிவாரிப் பகுதிகளிடையேயும் சகோதரத்துவப் பிணைப்பும் பெருகி வளர்ந்தது. முடிவில் இவர்கள் பூரண தேசிய சுதந்திர பதாகையை ஜெய கோஷத்துடன் பறக்க விட்ட காலையில், மேற்கூறப்பட்ட இரு முக்கிய காரணங்

களாலும் எல்லா தேசிய இனங்களின், மொழிவாரி பகுதிகளின் ஒருமைப் பிணைப்பில் ஜனநாயக சமுதாயங்கள் அமைக்க வழி பிறந்தன. இந்த சமுதாயங்களில் எல்லா இனங்களும் பூரண உரிமையும், சுதந்திரமும் பெற்றன. ஜனநாயக சுதந்திரத்திற்காகப் போராடி வெற்றி பெற்றவர்கள் வெற்றிக்கு வழிகோலிய ஒரு பகுதி மக்களின் உரிமைகளை எங்கும் மறுத்தது கிடையாது; மறுக்கக்கூடியவர்களுமில்லை.

இந்த நூற்றாண்டில் சுதந்திரம் பெற்றுள்ள நாடுகளின் கருத்துக்களுக்கும், நடைமுறைத் திட்டங்களுக்கும் முற்றும் முரணாக சட்டம் வகுத்துள்ள ஒரே நாடு இலங்கைதான். ஜனநாயகத்தின் பெயரில், ஜனநாயகத்தின் அடிப்படை அம்சமான, அரசாங்க நடவடிக்கைகளை தங்கள் சொந்த மொழியில் நடத்த ஒரு பகுதி மக்களுக்குள்ள சாதாரண உரிமையை, இவ்வாட்சியினர் மறுக்கின்றனர். நமது நாட்டு ஜனநாயகத்தின் அத்திவாரம் பலமற்ற ரீதியில், கட்டப்படுமுன்பே குட்டிச்சுவராகி தகர்ந்து தரைமட்டமாகக் காரணம் என்ன? நமது ஜனநாயகத்தின் பலஹீனமென்ன? அதன் ரூபத்தை பின்பற்றுவதாகப் பாசாங்கு செய்துகொண்டு, மறுபுறத்தில் அதன் அடிப்படை குணத்திற்கு சாவுமணி அடிப்பதேன்? அஸ்திவாரத்தை தவறாக வைத்துக்கொண்டு நாட்டின் ஜனநாயகமுறையை நம்மால் வளர்க்க முடியுமா? எத்தனை நாளைக்குத்தான் அது நிலைபெற்றிருக்கும்? அஸ்திவாரத்தில் சீறுபட்டிருக்கும் இந்நிலை இன்று மொழியையும், நாளை மதத்தையும், சில வேளை ஜாதிகளைக்கூட தாக்கி, அதன் பின்னர் மனித உரிமையையே குழித்தோண்டிப் புதைக்கும் என்று நாங்கள் சிந்திப்பதில் தவறுண்டா?

இந்த கேள்விகளை மிகவும் அக்கறையுடன் நான் கேட்கிறேன். பிற நாகரீக நாடுகளில் இல்லாத முறையில், ஜனநாயகத்திற்கே மாறுபட்ட வழிகளில் இலங்கையில் மட்டும் சட்டங்கள் இயற்றப்படுவது எனக்கு அச்சத்தையும், தடுமாற்றத்தையுமே உண்டுபண்ணுகிறது. இன்று இந்த சபையில் துரதிஷ்டவசமாக சமர்ப்பிக்கப்பட்டு நாம் வாதமிடும் இந்த மசோதாவைப் போன்றதொரு படுபாதகமான மசோதா, கடந்த 100 ஆண்டுகளில் வேறு எந்த நாட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுமே நிறைவேற்றப்பட்டது கிடையாது என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த மசோதாவைப் போன்றதொன்றை, போலிஷ் மொழிக்கு எதிராக 19ம் நூற்றாண்டில் பிஸ்மார்க் என்பவன் கொண்டுவந்தான். ஒரு மொழியை மற்றொரு மொழியின் மேல் பலாத்காரமாகத் திணிக்கும் முயற்சிகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரும் நடைபெற்று இருக்கின்றன. அறிவில்லாத, சரித்திரம் தெரியாத சில 'தனிச் சிங்கள' ஆவேசப் பேர்வழிகள், ஸ்கொட்லாந்தர்கள், வேல்ஸ் காரர்கள், ஐரிஸ் நாட்டவர்களின் மொழிகளையும், அவைகளுடன் ஆங்கில மொழியின் சம்பந்தத்தையும் எடுத்துக் கூறினர்கள். இந்த ஆசாமிகள் இவைகள் பற்றி குறிப்பிடுகையில், இவைகள் நடந்த காலங்களைப்பற்றி இங்கு குறிப்பிடாதிருந்து விட்டனர். நான் கூறுகிறேன், அது ஜனநாயக காலமல்ல, காட்டுமிராண்டித்தனமான எண்ணங்களும், கொள்கைகளும் குடிபுகுந்திருந்த காலம். அறியாமையும், அனுச்சாரமும் மலிந்திருந்த காலம். ஒரு சிறு களவுக்காக மனிதனை தூக்கில் போட்டு சாகடித்த காலமது. நீதிபதியின் கருத்துக்கு முரண்பட்டிருந்த 'ஜூரி'களை, நீதிபதியின் வழிக்கு வரும் வரை ஒரு அறையிலே அடைத்து வைத்து உணவும் தண்ணீரும் கொடாது சாகடித்த மிருகத்தனம் நடந்த நாட்களவை. இந்த சம்பவங்கள் அக்கால ஆங்கில மக்களின் குணும்சத்தையும், அறிவுதாரத்தையும் காட்டப் போதியன. இந்த காலத்தில்தான், காட்டுமிராண்டித்தன்மை பரிமளித்த நாளில்தான் வேல்ஸ், ஸ்கொட்டிஷ், ஐரிஸ் மக்களின் மொழிகளை ஆங்கிலேயர் நசுக்கப் பார்த்தனர்.

ஆனல், இங்குள்ள நண்பர்களுக்கு ஒன்றை ஞாபகப் படுத்த விரும்புகிறேன், அந்த மொழிகள் இன்னும் செத்துவிடவில்லை. அவைகள் இன்றும் சக்திபெற்றே விளங்குகின்றன. இம்மூன்று நாடுகளிலும் தேசிய இயக்கத்திற்கு இந்த மொழிகள் வழிகோலி இருக்கின்றன.

காட்டுமிராண்டித் தன்மையான எண்ணங்கள் குடியிருந்த காலத்தில் நடந்த நடத்தைகளை திரும்பவும் இந்த நாட்டில் புகுத்த நினைக்கிறீர்களா? என்று 'சிங்களம் மட்டும்' கூப்பாடு போடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்களை நான்கேட்கிறேன்.

இந்த மசோதாவினுல், இந்த அரசாங்கம் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை மட்டும் மறுக்கவில்லை; நாகரீகக் காலத்து செய்கைகளுக்கு அப்பால் இந்த நாட்டை இழுத்துச் செல்கிறது. எதிர்தரப்பிலுள்ளவர்களை நான் கேட்கிறேன், உங்களுக்கு அரசியல் மனவுணர்வு உண்டா? நீங்களெல்லாம் ஜனநாயக வாதிகள்; சிலர் சோஷலிஸம் போதித்தவர்கள்; சிலரின் கடந்த கால சேவைகளுக்கு நாம் பெருமைப்படுகிருேம். அப்படிப்பட்ட உங்களின் கடந்தகால சோஷலிஸ பிரச்சாரத்தின் அடிப்படையான நேர்மையான விதிகளின் நாமத்தை துணைகொண்டு கேட்கிறேன், இந்த மசோதா நியாயமானது என்று நீங்கள் கருதுகிறீர்களா? தேசிய நியாயத்தின் எந்த சட்டத்தின் நாமத்தில், நவீன ஜனநாயத்தின் எந்த பழக்க வழக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நீங்கள் எங்கள் உடலோடு ஒட்டிய உரிமையை மறுக்கிறீர்கள்? எந்த மதத்தின் நாமத்தில் தமிழ் பேசும் மக்களின் பிறப்புரிமையை நீங்கள் மறுக்கிறீர்கள்?

## பிரதமரின் கூற்றுகள் ஏற்க முடியாதவை

இந்த மசோதாவின் இரண்டு முக்கிய அம்சங்களைப் பற்றி நான் இனி எடுத்துச் சொல்கிறேன். சிம்மாதனப் பிரசங்கத்தில் சிங்களம் தனி உத்தியோக மொழியாவது பற்றி பிரகடனப்படுத்தப் பட்டது. இந்த தீர்மானம் சம்பந்தமாக நாங்கள் கேள்விகள் கேட்க முயன்றபோது, மசோதா பாராளுமன்ற சபையில் அறிமுகப்படுத்தும் வேளையில் இவைகளுக்கு பதில் தருவதாகக் கூறப்பட்டது. மாறுபட்ட கருத்தினரின் ஆலோசனைகள் கூட புறக்கணிக்கப்பட்ட ரீதியில் மசோதா மிக விரைவில் பாராளுமன்றத்திற்கு வந்தது.

அந்த மசோதாவின் பெயரில்தான் இன்று நாம் சொற்பொழிவுகள் நிகழ்த்துகிருேம். இன்று நமது கேள்விகளுக்கு கிடைக்கும் பதிலென்ன? மசோதா சட்டமாகும் போது இவைகளுக்கு சரியான விளக்கம் கிடைக்குமாம். இந்த மசோதாவின் சட்டங்கள் அமுல் நடத்தப்படும் வேளையில், நாம் நமது 'அறியாமையி'னல் பயப்படுவது போன்று இந்த மசோதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் தமிழ் பேசும் மக்கள் பயப்படுவதற்கான எதுவுமே நடைபெறுதாம். நாம் கேட்கும் கேள்விகளுக்கு பதில் தரவேண்டிய பிரதமர், இந்த உறுதிகளைத் தருகிருர். இந்த உறுதிகளைக் கேட்டு, சீக்கிரமே சட்டமாகப் போகும் இந்த மசோதவிற்கு நாம் சம்மதம் தெரிவிக்க வேண்டுமாம். சட்டத்தை நிறைவேற்ற இது புதுமையான முறையாக இருக்கிறது! மிக முக்கியமான விஷயம் சம்பந்தப்பட்ட அதி முக்கியமான சட்டமிது என்பதை நாம் சற்று ஞாபகப்படுத்திப் பார்க்க வேண்டும்.

இவர்களின் போலிவேஷம் இன்று துலாம்பரமாகிவிட்டுள்ளது. மசோதாவை படிப்படியாகத் தமிழ் பேசும் மக்களின் தலையில் சுமத்துவது தான் இவர்களின் கொள்கை. சிங்களத்தைத் திணிக்கும் காலவரையறைகூட மக்களின் நலனை முன்னிட்டு, எல்லா மக்களின் வசதியை முன்னிட்டும் தீர்மானிக்கப்படவில்லை. தேர்தலில் சில ஆசனங்களை பெறும் திட்டத்தில் கால வரையறை நிர்ணயித்துள்ளார்கள் ஜனநாயகஆட்சிக்கு அருகதையற்ற இந்த நடவடிக்கைகளை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இந்த மசோதாவை ஆதரித்து வெளிவந்த முறையில் ஒரு புதிய அம்சம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த மசோதாவை நாங்கள் அங்கீகரிக்கவேண்டுமாம். எந்த ரீதியில்? மசோதாவின் அடிப்படையிலல்ல. அதன் நடைமுறையைப் பார்த்தல்ல. ஆனல் கௌரவ பிரதம மந்திரியின் வாக்குறுதியை மட்டும் ஏற்று நாங்கள் அங்கீகாரம் தர வேண்டுமாம். இந்த முறையை பிரதமர் எடுத்தியம்பியே இருக்கக் கூடாது. இதனுல் நாங்கள் சற்று தடுமாற்றத்தில் ஆழ்த்தப்பட்டிருக்கிருேம். விவாதத்தின் போது பிரதமர் மேற்கூறப்பட்ட விதத்தில் தனது தனிப்பட்ட வாக்குறுதியில் நாம் நம்பிக்கை வைத்து ஏற்க வேண்டும் என்று பிரஸ்தாபித்தது முற்றும் தவருன செய்கையாகும். இந்த முறை புதுமையானதாகவும், நேர்மையற்றதாகவும் இருக்கிறது. பிரதமரையும், அவரின் அரசியல் வேலைகளையும் நாங்கள் மிக்க மதிப்புடன் கருதியுள்ளோம். கடந்த பாராளுமன்றத்தில் இச்சபையின் எதிர்க்கட்சித் தலைவராகவும், இன்று சபை பிரதமராகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் நடவடிக்கைகளுக்கு நாங்கள் மரியாதை தருகி ருேம். இந்த சபையில் பிரதமர் என்ற ரீதியில் அவரின் நிலை உயர்ந்துள்ளது என்பதில் சந்தேகமே இல்லை. அது வளர நாங்கள் ஆசைப்படுகிருேம் வளர்க்க நாங்கள் உதவியும் புரிவோம்.

**சுந்தரலிங்கம்:**

முதுகெலும்பில்லை........

## நம்பிக்கைப் பிரச்சினை

தனிப்பட்ட முறையில் தன்மேல் நம்பிக்கை வைக்கும்படி பிரதமர் எம்மை வேண்டிக் கொண்டதை நான் கடுமையாகக் கண்டிக்கிறேன். நேச பூர்வமாகக் கூறுகிறேன், அரசியல் ரீதியில் இது இயலாத காரியம் என்று. இதை அவரும் அறிவார். எனவே, இந்த மசோதாவின் தாரதம்மியத்தைக் கொண்டு இதை பரிசிலனை செய்ய இடந்தருமாறு அவரை தாழ்மையுடன் நாம் வேண்டிக் கொள்கிருேம். ஏனெனில், அவர் கூறும் நம்பிக்கைப் பிரச்சினை எவ்வளவு தூரம் செல்கிறதென்பதை நாம் சற்று அணுகிப் பார்க்க வேண்டும். தனிப்பட்ட முறையில் தம்மீது நம்பிக்கை வைத்து இந்த மசோதாவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று தமிழ் மக்களை பிரதமர் கேட்டுக் கொள்வதாக இருந்தால், தமிழ் மக்கள் அதே நியாயத்தைக் காட்டி பிரதமரை ஒன்று கேட்க முடியும். சிங்களத்தையும் தமிழையும் அரச கரும மொழிகளாக்கும் ஒரு மசோதாவுக்கு, அது சிங்கள மக்களுக்கு எந்த விதத்திலும் ஊறு செய்யாது தான் பார்த்துக் கொள்வதாக கூறி தன் மீது நம்பிக்கை வைக்குமாறு சிங்கள மக்களிடம் கேட்குமாறு பிரதரை தமிழ் மக்கள் கோரமுடியும். சிங்களவர்களிலும் பார்க்க தமிழர்கள் தன்னை நம்புவார்கள் என்று பிரதமர் கருதினலேயல்லாமல் இத்தகைய ஒரு வேண்டுகோளை நிச்சயமாக ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். இது நம்பிக்கைக்கான ஒரு பிரச்னையல்ல. அதிகாரமும்—ஆற்றலும் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்னை இது. இந்த மசோதா பற்றிய இன்னுமொரு விஷயம் நாம் கவனிக்க வேண்டியது. தமிழ் மக்களின் மொழிக்கு சிங்களத்துடன் சம அந்தஸ்தளிக்கப் படுமென்று அவர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல தடவைகளில் உறுதியளிக்கப்பட்டது.

சமீபத்திய சரித்திரத்தை நாம் பார்ப்போம். ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக சிங்களமும் தமிழும் சம அந்தஸ்துடன் வாழ்ந்தன. பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் முதலில் ஆங்கில ஆட்சிக்கு எதிராக கலகம் செய்த சகோதரர்களாகவும், பின் அன்னிய ஆட்சிக்கு இரையாக்கப்பட்டவர்களாகவும், இந்த நூற்றாண்டில் சுயாதீனத்திற்காகப் போராடிய தேசாபிமானிகளாகவும் சிங்களவர்களும் தமிழர்களும் சம இடமே பெற்றிருந்தனர். அவர்களின் மொழிகளும் கூட சம நிலையே பெற்றிருந்தன. தமிழர்கள் மீது சிங்களத்தை திணிப்பது என்ற பிரச்னை என்றுமே இருந்ததில்லை. இலங்கை தேசிய காங்கிரஸின் காலத்தில் மொழி ஒதுக்கல் பிரச்னை ஒரு தடவை கூட எழவில்லை.

## சரித்திரத்தின் சான்று

பிரிட்டிஷ் ஆட்சியின் 150 வருட காலத்தில் இலங்கையர் சமூகம் என்ற பொதுக் கண்ணோட்டம் உரமிட்டு வளர்க்கப்பட்டு வந்தது. இலங்கை தேசிய காங்கிரஸின் தோற்றத்தோடு அதன் காலத்தில் ஒரு ஐக்கிய இலங்கை சமூகத்தை கட்டும் மகத்தான கைங்கரியம் நிறைவேற்றப் பட்டதென்றே கருதப்பட்டது. இன்பகரமான எதிர் காலத்திற்கு தலைதூக்க நாட்டிலுள்ள இரு தேசிய இனங்களும் சங்கமமான ஒரு பொது தேசிய உணர்ச்சி பொலிந்து விட்டது என்று எதிர்பார்க்கப்பட்டது. இதுவுமல்லாமல் 1930ம் வருடத்திய சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் ஐக்கிய இலங்கையர் என்ற உன்னதமான லட்சியத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட அரசியல் ஸ்தாபனங்களாகின.

1944ல் சிங்களத்தையும் தமிழையும் அரச கரும மொழியாக்குவது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது, இந்த புனிதமான இலங்கைத் தேசியத்தை பிரதபலித்தது. இந்த முடிவை அன்று சிங்கள மக்களும் அவர்களது தலைவர்களும் சுயாதீனமாகவும், ஏகோபித்தும் ஏற்றுக்கொண்டார்கள். இதற்காக தமிழர்கள் போராடவேண்டியிருக்கவில்லை. ஏனென்றால் அன்று தேசிய இயக்கம் வெவ்வேறு தேசிய இனங்களை இலங்கையர் சமூகம் என்ற போதத்தில் உருக்கேற்றி புடம் போ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ட்டு எடுத்திருந்ததின் இயல்பான முடிவே இது. இந்த ஒரே இலங்கையர் சமூகம் என்ற போதம் ஒரு இனம் மற்ற இனத்தின் ஜனநாயக பூர்வமான சகல உரிமைகளை கௌரவித்துப் பேணியதன் மூலம் ஏற்பட்டது.

சம அந்தஸ்தை அங்கீகரித்த இந்த நிலை மீண்டும் உத்தியோக பூர்வமாகவே ஊர்ஜிதம் செய்யப்பட்டது. 1954 வரை இது மாறவில்லை. தமது மொழிக்கு ஆபத்தேற்படக் கூடும் என்று இதுவரை தமிழ் மக்கள் கனவிலும் எண்ணவில்லை. கடந்த நவம்பர் வரை இருந்த நிலை இதுதான். ஆனால் திடீரென்று தமிழ் மக்கள் மீது அவர்கள் தங்கள் மொழியை இழக்க நேரிடும் என்ற ஆபத்து குடை கவிழ்ந்தது.

## விஸ்வாசம் தகர்ந்தது

கடந்த அரை நூற்றாண்டாக தமிழ் மக்களுக்கு சிங்களத் தலைவர்கள் கொடுத்த சகல வாக்குறுதிகளையும் இந்த மசோதா உடைத்து சுக்கு நூறுக்குகிறது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இந்தப் பரம்பரையின் சிங்களத் தலைவர்களின் சொல்மீதும் செயல்மீதும் தமிழ் மக்கள் வைத்திருந்த விஸ்வாசம் தகர்க்கப்பட்டு விட்டது. இந்த மசோதா மூலம் இன்றைய சிங்களத் தலைவர்கள் நம் நாட்டின் சரித்திரத்தின் ஓட்டத்தையே பின்னோக்கி திருப்ப முயலுகிறார்கள். சென்ற ஒன்றரை நூற்றாண்டுகளாக ஒரே தேசிய சமூகத்தை நோக்கி உறுதியாக முன்னேறிக் கொண்டிருந்தோம். எமது இரு மொழி குழுக்களுக்கிடையில் ஐக்கியத்தை உரம் பாய்ச்சி வளர்த்திருந்தோம். ஒரு இலங்கையர் சமூகத்தை நாம் கட்டி விட்டோம் என்று நம்பியிருந்தோம். இரு மொழிகளை நாங்கள் பேசியபோதிலும் எமக்குப் பொதுவான ஒரு தேசிய இலக்கு இருக்கிறதென்று நாங்கள் நம்பினோம். இரு மொழி சமூகத்தை கட்டுவது கடினம். ஆனால் கட்டிய பின் அதன் துவஜத்தை உயர்த்துவது கம்பீரமானது. இது ஸ்தாபிக்கப் பட்டு விட்ட ஒரு யதார்த்தம் என்று எண்ணினோம். அதன் அடிப்படையில் அரசியல் ஜனநாயகத்தையும், பொருளாதார சோஷலிஸ தார்ப்பரியத்தைதையும் கட்டி வளர்க்க முயன்றோம்.

திடீரென எமது மக்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றம் தடுக்கப் பட்டு விட்டது. எமது பிரயாணத்தின் திக்கு மாறி விட்டது. முற்போக்கின் சக்திகள் மிலேச்ச சகாப்தத்தின் பிற்போக்கின் தேர்ச்சில்லில் கட்டப்பட்டுக்கிடக்கின்றன. தேசியத்திற்குப் பதிலாக இந்த மசோதாவின்மூலம் வகுப்புவாதத்திற்கு பேயுருக்கொடுக்கப்படுகிறது. தேசியஒற்றுமைக்கு பதிலாக இந்த மசோதா நாட்டைப்பிரிக்கவும், பிரிவினை சக்திகளுக்கும் தூபதீபமிடுகிறது. அடிமைச் சமூகப் பொருளாதாரத்திற்கு உயிரூட்டுகிறது. சகிப்புத்தன்மையும் வகுப்புவாத குரோதமும், பேய்க்கூத்தாடும். ஒரு சட்டத்தின் மூலம் எமது தேசிய பாரம்பரியத்தின் நல்லவை சகலவற்றையும் அழித்தொழிக்க முயல்கிறோம். இந்த நீசத்தனத்தின் விளைவாக ஏற்படும் பலாபலன்களுக்கு இந்த அரசாங்கமே பொறுப்பாளியாகி விட்டதென்பதை நான் பகிரங்கமாக சொல்ல விரும்புகிறேன்.

## இனவெறித் தோற்றம்

1954-ல் சிங்களமும் தமிழுமே ஆட்சி மொழிகளாக இருந்தன. இதை சகல அரசியல் கட்சிகளும், சிங்கள மக்களில் பெரும்பான்மையினரும் தாராளமாகவே ஏற்றுக்கொண்டனர். முன்னைய தீர்மானத்தை மீறுவதற்கு சென்ற இரண்டு வருடங்களில் நடந்ததென்ன? என்னைப் பொறுத்த மட்டில் அரசியல் வானத்தில் குறுகிய சிங்கள வகுப்புவாதிகள்- மெத்தானந்தா- ஜெயசூரியா கோஷ்டி தலை தூக்கியதே காரணம் என்று கருதுகிறேன். தமது குறுகிய பிற்போக்கு அரசியல் அபிப்பிராயத்தை திருப்திப் படுத்த இவர்கள் நாட்டின் எதிர்காலத்தை இரையாக்கவிரும்புகிறார்கள். விஷமத்தனமான வகுப்பு வெறியை கட்டவிழ்த்துவிடும் இந்தக் கூட்டத்தின் கண்மூடிச் செயல்களுக்காக நாம் நாட்டின் வருங்காலத்தையே நாசமாக்குவதா? இல்லை. சிங்கள தமிழ் பொது மக்கள் தங்களின் தலைவிதியை நிர்ணயிக்க இந்த குரோதமும் வெறியும் பரப்பும் கும்பலுக்கு இடமளிக்கப்போவதில்லை,

இந்த மசோதாவின் இன்னுமொரு பகுதியை இப்போது பார்ப்போம். இந்த மசோதாவை நான் ஏன் எதிர்க்கிறேன் என்று என்னை நானே கேட்டேன். ஒரு தமிழன் என்ற ஹோதாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது ஆட்சேபனைகள் என்ன? எனது பதில் இது தான். நான் இந்த நாட்டின் சுதந்திரப் பிரஜை. ஒரு சுதந்திரப் பிரஜை என்ற ரீதியில் எனக்கும் பல உரிமைகள் உண்டு. அதில் ஒன்றுதான் எனது வாழ்வில், அரசாங்கத்துடன் எனது உறவில் எனது பாஷையை உபயோகிக்க உள்ள உரிமை. அந்த உரிமை இன்று என்னிடமிருந்து பறிக்கப் படுகிறது. எவ்வளவுதான் உங்களது செயலுக்கு நீங்கள் சமாதானம் கூற எத்தனித்தாலும், என்ன தர்க்கத்தைத்தான் முன் வைத்தாலும் உண்மை என்னவென்றால் ஒரு சுதந்திர பிரஜை என்ற ரீதியில் என் வாழ்வுக்கான மார்க்கத்தில், அரசாங்கத்துடன் நான் கொள்ளக்கூடிய உறவில் எனது மொழியை எனக்கு உபயோகிக்க முடியாது. இது தான் உண்மை. இதனால்தான் ஒரு தமிழன் என்ற ஹோதாவில் இந்த மசோதாவிற்கு எதிராக நான் கடுமையான குரல் எழுப்புகிறேன். ஒரு ஜனநாயக ஆட்சியில் மக்களின் அடிப்படை உரிமைகள் பற்றி எவ்வித விவாதம் செய்வதற்கு என்றுமே இடமில்லை.

## நடைமுறை விளைவு

சிங்களம் மட்டுமே இந்த நாட்டின் ஒரே ஆட்சி மொழியாகிறது என்பதின் நடைமுறை விளைவென்ன? அரசாங்க ஆசீர்வாதம், அரசாங்க ஊழியத்தில் வேலைக்கமர்வது, வர்த்தக நிலையங்களில் வேலை பெறுவது, பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறையிலும், எங்கேனும் வேலை பெறுவது, முக்கியமாக சிங்களத்திலேயே இருக்கப்போகிறதென்பதே இந்த மசோதாவின் தர்க்கபூர்வமான முடிவு. ஆனால் இயல்பாகவே இங்கேயே நின்றுவிட முடியுமா? கவர்ணரின் சிம்மாசனப்பேச்சுமீது விவாதம்நடந்த போது சமஷ்டிவாதிகள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சமஷ்டி கோரினர்கள், பின் புத்தளமும்வேண்டுமென்கிறார்கள். இயல்பாகவே இத்துடன் நின்றுவிட முடியுமா என்று பிரதமர் கேட்டதன் கருத்தென்ன? ஒரு சட்டத்திற்கு அதன் நடைமுறை விளைவுகள் உண்டு. அந்த சட்டத்தைக் கொண்டு வருபவர்களின் விருப்பு வெறுப்புகளை பொறுத்ததல்ல இது என்பதை எடுத்துக் காட்டவே விரும்புகிறேன்.

இந்த மசோதாவின் இயல்பான விளைவுகள் என்ன? ஒன்றைமட்டும் குறிப்பிட விரும்புகிறேன். கல்வி மந்திரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னத்தைதான் சொன்ன போதிலும் இந்த மசோதாவின் பலனாக தவிர்க்கப்பட முடியாமல் கல்வி போதனா மொழி சிங்கள மொழியாகவே இருக்கும்.

இதன் பலாபலன் என்ன? எமது மொழியை நாங்கள் உபயோகிப்பதை இது மறுக்கிறது. வேறொரு மொழியில் நான் கல்வி பெற தயாராக இல்லை என்றால் நான் கல்வி அறிவு பெறமுடியாது. நவீன அறிவிலிருந்து, நவீன வளர்ச்சியிலிருந்து நான் என்னை துண்டித்துக் கொள்வதில் தான் இது கொண்டுபோய் விடும். அறிவீனனாக, எழுத்தறிவில்லாதவனாக, நவீன அறிவுடன் தொடர்பில்லாதவனாக வாழ்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

இந்த மசோதாவை சமர்ப்பித்தபோது இதற்கு ஆதரவாகப் பேசிய பிரதமர் முன் வைத்த வாதத்தை தவிர வேறெந்த வாதத்தையும் முன் வைக்க முடியாது. "சிங்களத்தை மட்டும் ஆட்சி மொழியாக்கும் பிரச்சினை உண்மையில் நாம் மீண்டும் ஆலோசித்துப் பார்க்கக்கூடிய கட்டத்தை தாண்டி விட்டது" என்று அவர் கூறினர்.

இந்த மசோதா பற்றி உள்ள உண்மையான, நேர்மையான ஒரே வாதம் இது தான் என்று நம்புகிறேன். இந்த மசோதாவுக்கு ஆதரவு கேட்க உள்ள ஒரு காரணத்தை பகிரங்கமாகக் கூறியநேர்மை அவரிடம் இருக்கிறது என்பதை சுட்டிக் காட்டவே இதைக் கூறுகிறேன். மக்களிடமிருந்து உத்தரவு கிடைத்தது பற்றி அவரும் மற்றவர்களும் குறிப்பிட்டார்கள். இதுதான் பிரச்சினையின் முழுக்காரணமும். இந்த துரதிஷ்டம் பிடித்த உத்தரவில்லை என்றால் அவர்கள் நீதியாகவும் நேர்மையாகவும் நடப்பார்கள்.

இந்த மசோதா பற்றி அரசாங்கத்திற்கு கிடைத்த **வாக்களிப்பு என்ன?** அவர்கள் ஒரு திட்டத்தின் அடிப்படையில் போட்டியிட்டு வென்றார்கள். அந்த திட்டத்தில் ஒன்று சிங்களத்தை தனித்து ஆட்சி மொழியாக்குவதென்பதும், தமிழை நியாயமானளவு உபயோகிக்க இடமளிப்பது என்பதுவுமாகும்.

எம். இ. பிக்கு கிடைத்த வாக்களிப்பு சிங்களம் மட்டும் அரசாங்க மொழியாகும் என்ற கொள்கைக்கு மட்டுமா? அதன் திட்டத்தின் மற்றப் பகுதிகளுக்காக மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு வாக்களித்திருக்கலாம். எம். இ. பி. சிங்களம் மட்டும் கொள்கையுடன் போட்டியிட்ட போது சில தொகுதிகளில் தமிழர்கள் அதன் அபேட்சகர்களுக்கு வாக்களித்தார்கள் என்பதை யாழ்ப்பாண பிரதிநிதி சாதித்தார். எனவேதான் வாக்களிப்பின் அடிப்படையில் முற்ருகவும் வாதிக்கமுடியாது.

சிங்களத்தை மட்டும் ஆட்சி மொழியாக்குவது என்ற மசோதாவை பிரதமர் கொண்டுவந்த போது, திட்டத்தின் மற்றப் பகுதியான தமிழை நியாயமானளவு உபயோகிக்க உரிமை அளிப்பது என்பது பற்றியும் இந்த மசோதாவில் அவரால் சேர்த்துக்கொள்ள முடியவில்லையா? திட்டத்தின் ஒரு பகுதியை மட்டும் பொதுப்படையான கொள்கையாக முன் வைத்திருக்கிறீர்கள். மக்கள் தீர்ப்பு என்று கூறி இதை நாங்கள் எதிர்க்க முடியாது என்கிறீர்கள். அப்படியென்ருல் திட்டத்தின் ஒரு பகுதிக்கு இடமளித்த போது மற்றப் பகுதிக்கு தமிழை நியாயமானளவு உபயோகிக்க இடமளிப்பது என்ற பகுதியை சேர்த்துக் கொள்ளவில்லையே? என் திட்டத்தின் அரைவாசிப் பகுதியை விட்டுவிட்டீர்கள்?

**எஸ். டப்லியூ. ஆர். டி. பண்டாரநாயக்கா:** தமிழை நியாயமானளவு உபயோகிக்க இடமளிப்பது பற்றி நாம் விபரமான ஒரு திட்டத்தை தயாரித்து வருகிறேம் என்பதையும், அதையொட்டி திருத்தப் பிரேரணைகள் கொண்டு வருவோம் என்பதையும் கௌரவ அங்கத்தவர்க்கும், இச்சபைக்கும் மீண்டும் உத்திரவாதமளிக்கிறேன்.

**பி. கந்தையா:**

பிரதமர் கூறியவற்றிக்காக அவருக்கு எனது நன்றிகள். ஆனல், நியாயமானளவு உபயோகம்பற்றி பிரதமரின் எண்ணத்தில் ஒன்றிருக்கலாம் அவரது கட்சியினரின் எண்ணத்தில் வேருென்றிருக்கலாம். இந்த எண்ணம்கூட மசோதாவில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

மக்கள் வாக்களிப்பு என்ற பிரச்சினையில் பொதுப்படையான ஒரு கருத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று எண்ணுகிறேன். திட்டமான ஒரு சமூக வாழ்வை, திட்டமான ஒரு ஜனநாயக சமூகத்தை நிர்மாணிப்பதற்கான அடிப்படையாக நாம் ஏற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுக்கொள்ளும் ஜனநாயக சமுதாயத்தில் சில அடிப் படையான கொள்கைக்காக கண்காணித்துக் கொள்ள வேண்டும் அவை விவாதத் திற்கான பிரச்சினைகளாக முடியாது. பிரச்சினைகளானல் ஜனநாயக சமுதாயமும், திட் டமான வாழ்வும் சாத்திய மற்றதாகிவிடும். மதம், மொழி உரிமை, வயது வந்தவர் வாக் குரிமை போன்ற பிரச்சினை கள் எந்த ஒரு ஜனநாயக சமு தாயத்திலும் அதன் அங்கத்த வர்களின் விவாதத்திற்குரிய பிரச்சினைகளாக முடியாது. ஏனென்றல், ஜனநாயகத்தின லட்சியமே அவற்றை சாதிப் பதே.

எனவேதான் ஒரு சிறு பான்மை இனத்தின் மொழி உரிமை சம்பந்தப்பட்ட பிரச் சினையை பாராளுமன்ற விவா தத்திற்கான பிரச்சினையாக, பாராளுமன்ற வாக்களிப்புக் கான பிரச்சினையாக எழுப்பு வது சாத்தியமா, அவசியமா, புத்தி சாதுர்யமானதா என்று கேட்கிறேன். சாதாரண பிரச் சினைகளில் “பெரும்பான்மை வாக்கு” பற்றி கருதினும், இதுபோன்ற ஒரு அடிப் படைப் பிரச்சினையில் பெரும் பான்மை வாக்கை மட்டும் தீர்ப்புக்கு எடுத்துக் கொள் ளப்படாது.

மக்களின் வாக்களிப்பு என்ற இந்தப் பிரச்சினையில் ஒரு அரசியல் கட்சியின் கட மை என்ன என்பதையும் நாம் வரையறுத்து அறிந்து கொ ள்ள வேண்டும். ஒரு ஜனநா யக அமைப்பில் அரசியல் கட்சியின் கடமை என்ன? எதிரேயுள்ள அங்கத்தவர்கள் கூறியதுபோல வாக்காளர் கள் இட்ட கட்டளையை நிறைவேற்றுவதாரு? அல்லது வளர்ச்சி அடைந்த மக்கள் பகுதிகள் என்ற அடிப்படையில் நமது திட் டத்தின் பின் மக்கள் ஆதர வை கட்டிவளர்ப்பதா? அர சியல் கட்சிகள் மக்களை பிரதி நிதித்துவப் படுத்தக்கூடிய அதே வேளையில் மக்களை தலை மை தாங்கி நடத்திச் செல்ல வேண்டும்.

உதாரணமாக மொழிப் பிரச்சினையை எடுத்துப் பாருங்கள். இத்தகை ஒரு மக்கள் வாக்களிப்பை நடை முறைக்கு கொண்டு வரவே ண்டுமானல் அது எந்தளவு க்கு குறுகிய எல்லைக்குள் எங்களை வெருட்டுகிறது என் பதை பாருங்கள். இந்தியா வில் 19-ம நூற்றுண்டின் இறுதியிலும் உடன்கட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறுவது, அதாவது புருஷன் இறந்ததும் அதே தீயில் மனைவியையும் பொசுக்குவது நாடு பூராவும் நிலவி வந்த ஒரு பழக்கம். இதை மாற்ற வாக்குக்கு விடுவதாக இருந்தால் இந்தச் சாபக்கேட்டை ஒழித்திருக்க முடியாது. ஒரு முற்போக்கு அரசியல் கட்சியின் கடமை மக்களுக்கு எடுத்துக் கூறி, மக்கள் மத்தியில் இயக்கம் நடத்தி இறுதியில் சட்ட மூலம் இதை இல்லாது ஒழிப்பதே.

பால்ய விவாகப் பிரச்சினைக்கும் இந்த மார்க்கமே பொருந்தக்கூடியது மக்களின் அறியாமையை எதிர்த்து, மக்களின் ஆவேசமான எதிர்ப்பை சமாளித்தும் இதை ஒழித்துக் கட்டுவது ஒரு அரசியல் கட்சியின் கடமை என்று இந்திய தேசிய காங்கிரஸ் கருதியது, இந்தியாவிலிருந்து பால்ய விவாகக் கொடுமையை உடைத்தெறியும் சட்டத்தை அது கொண்டுவந்தது.

ஒரு அரசியல் கட்சியின் கடமைகளை காட்டவே இதை கூறுகிறேன். அப்போது பெருவாரி வாக்காளர்களின் தீர்ப்பை வெறுமனே ஒப்புக் கொள்வதே கடமை என்று யாரும் கூறமாட்டார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக எனக்கு இன்னுமொரு உதாரணம் உண்டு. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள பெருவாரி மக்கள் சமஷ்டிக் கட்சியையே ஆதரித்தார்கள். அதன் அங்கத்தவர்கள் இன்று பாராளுமன்றத்திலேயே இருக்கிறார்கள். ஆனல், அந்தக் கட்சியின் கொள்கை தமிழ் மக்களின் நலனுக்கு உசிதமானதல்ல என்று நான் கருதுகிறேன். இன்று சமஷ்டியின் போக்குக்கு எதிரான ஒரு கொள்கையைப் பின்பற்றுவதே மக்கள் மத்தியில் செல்வாக்கு இழப்பதாகும்.

என்றுலும் நான் எதைச் சரி என்று கருதுகிறேனே அதை தமிழ் மக்களுக்கு சொல்லி, அதன் பின் அவர்களின் ஆதரவைத் திரட்ட இயக்கம் நடத்தி அவர்களை அதன் பாதையிலே அழைத்துச் செல்வதே எனது கடன் என்று நான் கருதுகிறேன். ஆனல் எனக்கு எதிரேவுள்ள உறுப்பினர்கள் பின்பற்றும் போக்கை நானும் பின்பற்றுவதாக இருந்தால் காங்கேசன்துறை பிரதிநிதியின் கட்சியில் நான் சேருவதில் அது கொண்டுபோய் விடும்.

ஒவ்வொரு பிரச்சினையிலும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒவ்வொரு பிரச்சினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலும் பொதுஜன அபிப்பிராயத்தையே நிர்ணய சக்தியாக நான் ஏற்றுக்கொள்ளவில்லை போதமடைந்த எந்த அரசியல் வாதிகளும் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை விளக்கவே இதைக் கூறினேன்.

தேசியம் என்பது ஓர் உடலை ஒத்தது. அவ்வுடலில் ஒரு உறுப்பு. அதாவது தமிழ்ப் பேசும் மக்களாகிய சிறுபான்மையினர் எவ்வகையிலேனும் சுபக் குறைவுக்காளாவாராயின் புரியவேண்டிய பார வேலையை உடல் செய்து முடிப்பது மிகக் கஷ்டமல்லவா? யான் அரசாங்கத்தைக் குறைகூறவில்லை. நாமனை வரும் முன்னேறுவதே எமது நோக்கமாகும். ஆனல் தெரிவுப்போது அரசாங்க கட்சியினர் செய்து முடிப்பதாக வாக்களித்து அதிகார உரிமை பெற்ற கருமங்களை நிறை வேற்றுகையில் யான் இதுகாறும் கூறிய உண்மைகளை மனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

எமது பிரதமர் பிறநாடு சென்று எம்தேசத்தில் எதிர்கால விடயங்களை, அதாவது எம் நாட்டில் வதியும் அன்னிய படைகளை அகற்றுவதும் இந்நாடு குடியரசாவதையும், எமது வர்த்தகம் விரிவடைவதையும், பிறரிடத்துப் பொருளாதார உதவி கோருவதையும், மந்திரிசபைப் படம் போட்டிருக்கும் கருமங்களைத் திற்கும் ஆதரவு வேண்டுவதையுமான இன்னேரன்ன விஷயங்களைப் பற்றி உரையாடச் செல்கின்றனர். மேற் கூறிப கருமங்களனைத்தையும் பிரதமர் தமது கட்சியினரின் உதவியோடு மிக விரைவில் ஆரம்பிக்க வேண்டியராவர். ஆனல் ஊறுபட்டு மனந்தியங்கும் ஒரு குடும்பத்தினர் சண்டை சச்சரவுக்குட்படுவராயின் குறித்த கருமம் கைகூடுமா?

பிற நாட்டிற்குச் செல்லு முன் தமக்கு உளதாகும் ஆதரவோடு இப்பாஷைப் பிரச்சினையை நீதி முறையில் பிரதமர் தீர்ப்பாராயின், என்றும் நிலைக்கக்கூடிய பண்பாடொன்று அகன்று போகக் கட்சியினர்க்கிடையில் நிலவும் கொள்கை வேறுபாடுகளே எஞ்சி நிற்கும். அவ் வேறுபாடுகளும் அரசாங்கம் செய்து முடிக்க முற்பட்டுள்ள கருமங்களனைத்தும் முடிவு பெறுமளவில் ஓர் அளவிற்குக் குன்றி வருமன்றே!

எம்மிடையே நிகழும் விவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் பெரும்பாலும் பொருளாதாரக் காரணங்களைப் பற்றியிருந்த போதும், முற்ருக அவ்வாறு இருப்பதெனக் கூறுதலாகாது. "சிங்களம் மாத்திரம்" என்னும் போர் முன்னணிக்கு ஆதரவளித்தவற்றுள் தொழிலின்மையும் ஒன்ருகும். மாத்தளை அங்கத்தினர் இதனைத் தெளிவாகவும், பிரத்தியட்சமாகவும் எடுத்துக் காட்டினர். அவர் கூறியது உண்மையே!

இத்தொழிலின்மையைத் தீர்ப்பதில் நாமனைவரும் உங்களோடு ஒத்துழைக்கும் கருத்துடையோமாதலால் அரசாங்க சேவையில் இதுகாறும் அமர்ந்து, அன்றி இனிமேலாவது அமரவிருக்கும் சிறுதொகை தமிழரை இன்றைக்கேனும், எதிர்காலத்திலேனும் தடுத்து வைப்பதினுல் தொழிலின்மை தீர்ந்து போகுமா? அவர்களை அப்புறப்படுத்தினுலும் தொழிலின்மை உங்கள் கைப்பொறுப்பாயிருந்து காலந்தோறும் மென்மேலும் பெருகிக்கொண்டு வரும் தமிழரின் போட்டியை ஒழித்து விண்ணப்பிக்கும் சிங்களவர் சில நூற்றினர்க்கு தொழிற் பயப்பதனுல் இப்பிரச்சினையைத் தீர்ப்பது மிகச் சுலபமென்பதற்கு ஐயமில்லை. ஆனுல் அப்பிரச்சினை தீராதிருந்து வேறு வழிகளை நீங்கள் கையாள வேண்டிவரும். பிரச்சினை எதையும் தீர்ப்பதற்கு சுலபமான முறையைக் கையாளுவது நாடத்தக்கதாயினும் எமது வாழ்க்கையின் ஏனைய விடயங்களை நோக்குமளவில் அவ்வகை மோசமானதாகும்.

நாங்கள் மதிக்கத் தக்கதும் ஜனங்களின் எப்பகுதியாருக்கேனும் மனதிலாவது, மரியாதையிலாவது கிலேயான தீங்கை விளைவியாததுமான முறையை ஓர்ந்தே இவ்விஷயத்தை யான் சிந்தித்தேன். அவன் முடிவாக யான் கூறுவது யாதெனில், இம்மசோதா அவசியமில்லை என்பதேயாகும்.

இம்மசோதாவை ஆதரிப்போர் விரும்புவதென்ன? உரைப்பதென்ன? அது சிங்களப்பாஷையை விருத்தி செய்ய அவசியமென்பதாயின் அதனை நாம் ஒப்புக்கொள்ளுகின்ருேம். அப்பாஷையை விருத்தி செய்வதற்கும் அதற்கு இத்தேசத்தில் அரசாங்க முக்கியத்துவம் அளிப்பதற்கும் இம்மசோதா அவசியமெனில் அதனையும் ஒப்புக் கொள்ளுகின்ருேம். அப்பாஷையை விருத்தி செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்கும் அதற்கு இத்தேசத்தில் அரசாங்க முக்கியத்துவம் அழிப்பதற்கும் இம்மசோதா அவசியமெனில் அதனையும் ஒப்புக் கொள்கின்றோம். மேலும் சிங்களத்தைக் கற்கும் மாணவருக்கு, அப்பாஷையில் உன்னதக் கல்வி கொடுப்பதற்காக அப்பாஷையை விருத்தி செய்ய வேண்டுமெனில் அதனையும் ஒப்புக் கொள்ளுகின்றோம். தேசிய நலத்திற்காக ஒவ்வொரு சிங்களத் தொழிலாளிகள் சிறுவருக்கேனும், வளர்ந்தோர்க்கேனும் தொழில் கொடுப்பது அவசியமெனில் அதுவும் எங்களுக்குச் சம்மதமே. இவ்வளவும் தான் நீங்கள் விரும்புவதாயின் இம்மசோதாவை நீங்கள் கொண்டுவருவதற்கு காரணம் விளங்கவில்லை. எங்களுக்கு அபிப்பிராய பேதமும் இல்லையே. மேற்குறித்த நலன்களை ஆக்குவதற்குச் சிங்களச் சாதியாரின் அதிகாரமும் அவசியமல்லவே. அந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளே உங்களுக்குத் தேவையாகும். இந்நோக்கங்களை நிறைவேற்றுகையில் உடனடியாக என் சாதியாரின் உரிமையையும், அவர்களின் சுதந்திர வாழ்க்கையையும், எமது நாட்டிலுள்ள சிங்களவரோடு சகோதரத்துவம் பூண்டு ஒழுகும் தன்மையையும் மறுத்து ஒழித்தல் அவசியமா?

சிங்களச் சாதியார் மேற்குறித்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்குத் தங்கள் பாஷையை அரசாங்க மொழியாக்க உங்களுக்கு அதிகாரம் கொடுத்ததுண்டு. ஆனல், நீங்கள் இப்பொழுது செய்கிறமாதிரித் தமிழ்ப் பாஷையையும், தமிழ் மக்களையும் முற்றாய் அழிக்க உங்களுக்கு உத்தரவு கொடுத்தார்களோ? ("அரசாங்கத்தினர் ஒருவர் இல்லை, நாங்கள் அப்படிச் செய்யவில்லை") நன்று. எதிர்க்கட்சியின் அங்கத்தினர் நால்வர் எடுத்தாண்ட நியாயங்களை யான் இப்போ ஆராய்வேன். அவர்களும் பின்வருமாறு உத்தரம் கூறுவதற்கு இடமுண்டு.

தமிழ்ப் பாஷையையும், தமிழ் மக்களையும் முடித்தடித்து, அகழிவிட்டுத்தான் சிங்களச் சாதியாரின் பாஷையையும், பண்பாட்டையும் பொருளாதார நிலையையும் நிலைநாட்ட வேண்டுமென்பதா நீங்கள் கூறும் நியாயம்? சிங்கள மக்கள் விரும்பியது இதுவல்ல. பெருமையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரன்புமுடைய சிங்கள மக்கள் இவ்வரசாங்கத்தை நிறுவுங்கால், தமிழரை வஞ்சிக்க வேண்டுமென்று ஒரு போதும் கருதியிருக்கமாட்டார். அப்படி அவர்களின் எண்ணத்தைக் கூறுவது மிகத்தப்பிதம்.

அவர்களின் தேவைகள் எவையெனில், தமது பாஷை வளர வேண்டுமென்பதும், தாம் தொழில்களைப் பெற வேண்டுமென்பதும், தமது பிற்கால வாழ்க்கை சிறப்புற்று இருக்க வேண்டுமென்பதே அவர்களின் கருத்தாகும். இதனை மறுப்பார் எவருமில்லை. நாங்களும் அந்நோக்கங்களை ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனல் சமது பிற்காலத்தைச் சீர்படுத்துகையில் இன்னெரு சாதியாருக்கு அனுவசியமாகத் தீங்கை விளைவிக்கக் கருதுகின்றனரா? அது நீதி, நியாயமற்றது. ஆசியாவின் சமூகத்தினர் எவர்க்கும் இது பொருத்தமானதல்ல.

எங்கள் கட்சியில் சிலர் எடுத்துக் காட்டிய நியாயம் சரியென்று நீங்கள் உணர்ந்தால் அல்லது இன்றைக்கு உங்கள் மனதிலே ஒருப்படத் தவறுமாயின் நாங்கள் இந் நியாயத்தை ஜனங்களுக்குக் கூடிய சீக்கிரம் விளக்கித் தேசீய நலத்திற்கு மாருக சிங்களத்தைப் பாதுகாப்பார் போல் நடித்து ஏமாற்றத்தையும், தடுமாற்றத்தையும் உண்டாக்கியோரின் துர்க் கருமத்தை எதிர்த்துக் கொள்ளுதலே தகுதியாகும். நீதியும் நியாயமும் என்று காணும் எதனையும் ஜனங்களின் உத்தம பிரதிநிதிகள் எவரும் துணிவாகப் பொது மக்களுக்கு விளக்கிக் கொள்ளுவது அரசியல் ஞானத்திற்கும், தத்துவத்திற்கும் பொருத்தமல்லவா? இம்மசோதாவில் யான் கூறியபடி அமைந்துள்ள நற்கருமங்களை ஆதரிக்க மனமுடையேனுயினும் அது சிங்கள மக்களுக்குச் சிறந்த உரிமையை அளிப்பதோடு நில்லாமல், தமிழ் மக்களின் அதே உரிமையைக் கெடுப்பதே நோக்க முடையதாயிருத்தலால் யான் இம் மசோதாவோடு அனுதாபம் கொள்ள மாட்டேன். அதனுலேயே எத்தனை நல்லெண்ணம் இருந்தபோதும் நாம் இதனை ஆதரிக்க முடியாது. சிங்கள மக்களுக்குத் தவருன முறையிலேயே உரிமைகளை அளிப்பதாகும். எனெனில் அதே உரிமைகளைத் தமிழ் மக்களுக்கு மறுப்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க அங்கத்தினரிடத்தின் வினவுவது என்னவெனில், இம்மசோதாவை எதற்காகக் கொண்டு வந்தீர்கள்? பிரதமரோவெனில் மிகச் சுருக்கமாகக் கூறிவிட்டார். அவர் அப்படிச் செய்தது சரியானதைதான். கல்வி அமைச்சரோவெனில் கல்வி சம்பந்தமாகவே இம்மசோதாவைப் பற்றிக் கூறினர். தொழிற்கட்சிப் பாராளுமன்றக் காரியதரிசி தாங்கள் தாராளகுணசாலியாரென்றும், தங்களை நம்பும்படியும் கேட்டார். உண்மையாக நாங்கள் நம்புகிறோம். என் நீங்கள் கொடுமையாக உங்கள் தாராளகுணத்தோடு, என் சாதியாருக்கு நீங்கள் மறுக்கக்கூடாததும், நாங்கள் உங்களுக்கு மறுக்காததுமான உரிமையை மறுக்கிறீர்கள்? மாத்தறை அங்கத்தினர் தொழில் சம்பந்தமாகக் கூறுவதோடு, இந்திய தேசாதிபதி ராஜேந்திர பிரசாத், இந்தி சம்பந்தமாகக் கூறியதைத எடுத்தாண்டனர். தென் இந்தியாவிலும் அகில இந்தியாவுக்கான இந்தி பாஷை நிலை நிறுத்துவதற்காகவே அவர் பேசினர். உண்மையாக இம் மசோதாவை நியாயமானதென ஒரு போதும் கூறுதல் முடியாது. ஜனநாயகத்துக்கும், நீதிக்கும், தேசிய நலத்திற்கும் பாஷை நிலைபேறெய்தும் அவசியத்திற்குமாக இதனைக் கொண்டு வந்தீர்களா? இல்லை. நாகரீகம் நிலவும் இக்கால உலகத்தில் நீதி நியாயமற்ற முறையில் எங்கேயாவது இவ்வித சட்டம் பிறந்ததில்லை. இம் மசோதா நீதியற்றதும், அவசியவமற்றதுமாதலால் இருமடங்கு அருவருப்புக்குரியது.

இரு பகுதியிலுமுள்ள ஜாதித் துவேஷத்தினரால் எழுந்த மனமுரண்பாட்டைத் தீர்ப்பதற்கு யான் கூறுவது என்னவெனில் தமிழ் மக்கள் சிங்கள மக்கள் கோருவது போலவே தமது பாஷையைச் சுயாதீனமாகவும் தடையின்றியும் பிரயோகிக்கும் உரிமையை நாடி நிற்கின்றனர். இது அவர்களின் இயற்கை உரிமைதானென்றும், சகாயமல்லவென்றும் வாதாடுகின்றனர். தமிழரென்றளவில் நாங்கள் வெறொன்றையும் தேவைப்படவுமில்லை. கேட்கவுமில்லை. ஆனல் இக்கோரிக்கையில் நாமனைவரும் ஒன்றுபட்டிருக்கின்றோம். நாங்கள் பல வகையான உரிமைகளைக் கேட்கிறோமென எனது சிங்கள நண்பர் நினைப்பது பெரும் நீதியீனம். வேறெந்த உரிமைகளையாவது நாம் விரும்புமன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் ஏனைய ஜாதியினரின் பொது உரிமையாக எம்மை அவர்கள் இலங்கை மக்களெனக் கருதிக் கேட்கின்றோம்.

தமிழ் பேசும் மக்கள் இம்மசோதாவை ஏற்கமாட்டார்கள். அவர்கள் கோபத்தோடு மாத்திரமல்ல நிந்தனையோடும் அதனை வெறுத்துத்தள்ளுவர். இந்தக் கொடிய சட்டத்தை அதன் அடிப்படையான கொள்கையோடு எதிர்க்க வேண்டுமென்றும் அதனை அமுலுக்குக்கொண்டுவருகையில், ஒவ்வொரு படியிலும் தடுக்க வேண்டுமென்றும் அவர்கள் நிர்ணயித்துப் பிடிவாதமான தீர்மானம் கொண்டிருக்கின்றனர். அவர்களின் எதிர்ப்பு தொடர்ந்து நிகழ்வதுமல்லாமல் மன ஒற்றுமையோடும் நிகழுமென்பதற்கையமில்லை. தமிழ் மக்கள் பாதி அழுத கண்ணீரோடும், பாதி கோபக்குறியோடும் தமது தொழிலைப் புரிகையில்,இன்றுபோல் என்றாவது ஒற்றுமைப்பட்டிருக்கவில்லை. இம்மசோதாவைப் பற்றி அவர்களுக்கு அபிப்பிராயபேதமும் இல்லவே இல்லை. அகில தமிழ் மக்கள்,அதாவது அரசியல் கட்சியினர் அனைவரும், ஜாதியினர் அனைவரும், சமயத்தினர் அனைவரும் தாங்கள் போராடும் விஷயம் அவசியமும், நீதியும் பொருந்தியதென்றும் திடநம்பிக்கையினால் ஏவப்படுகின்றனர். தமிழ் மக்கள் வாழ விரும்பும் அரசியல் முறையைப் பற்றி எவ்வித முரண்பாடான கொள்கைகள் இருந்தபோதும், அனைவரும் இம்மசோதாவை எதிர்க்குமளவில் தமது நிலைபேறான வாழ்விற்காக வாதாடும் பொழுது அவர்களின் ஆவேசத்தை ஒரு போதும் அழிக்க முடியாது. அவர்களின் சரித்திரத்தை அவர்கள் மறக்கச் செய்யவும் முடியாது. ஒரு கூட்டத்தினரையேனும் அல்லது ஒரு நபரையேனும் நடந்துபோன சப்பவத்தை மறக்கச் செய்யலாம். ஆனால் சகலருக்கும் உரிமையான பெரிய பண்பாட்டோடு பலநூற்றாண்டுகளாக அப்பண்பாட்டிலிருந்து எழுந்த பல படைப்புகளையுடைய தமிழ் மக்களென்னும் திரள் சாகியத்தாரை அவ்வாறு மறக்கச் செய்தல் முடியாது. தொழிலாளி வகுப்பினர் தமது உரிமைக்கும், வாழ்க்கைக்கும் வாதாடச் சண்டையிடுவதைத் தவிர தமிழ் மக்கள் தமது பாஷைக்காகச் சண்டையிடுவதற்கொப்ப நீதி நியாயம் பொருந்திய போராட்டத்தை எங்கும் காண முடியாது.

தமிழ் மக்கள் காலம் செல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லச் செல்ல வலிமையான நெருக்கத்துக்குள்ளாகும் என் நிலையையேனும் ஏற்றுக் கொள்வார்களென சிலர் எண்ணுகின்றனர் போலும்—தமிழ் சாகியத்தார் சண்டையிடமாட்டார்களென்றும் சண்டையைத் தொடங்கினும் அதில் வலுத்து நிற்க மாட்டார்களென்றும் எண்ணுவாருளர். அப்படி நினைப்பது சுலபமாயினும் மிகத் தவறானதே.

இன்னும் சில தருணங்களில் தமிழர் சண்டையிட்டதுண்டு. ஆனால் அதில் நிலைக்கவில்லை. அத்தருணங்களில் அவர்கள் கோரியவை ஒரு பகுதிக்குரியன வேயன்றி, முழு மக்களையும் பற்றியிருக்கவில்லை. ஆகையால் இக்கோரிக்கைகளை ஆதரித்துத் தமிழ் மக்களனைவரும் சண்டையிடவில்லை ஆனால் பாஷையோவெனில் அது எவ்வளவு அடிமைத்தனம் பூண்டிருப்போருக்குத்தானும், சகிக்கமுடியாததும். அவசியமானதும், ஆழமானதுமே. இவ்விஷயம் தமிழ் பேசும் மக்களனைவரையும் வெகுதூரம் மிக ஆழமாகக் கிளர்ச்சி செய்திருக்கிறது. தமிழர் வசிக்கும் பாகங்களை புதுமையான ஒரு காட்சி தோற்றமளிக்கிறது. இன்று பாஷை அறிவைவிடவும் தொழில் பார்த்து தமது வாழ்க்கையை நடத்தும் பகுதியினரை மாத்திரம் இக் கிளர்ச்சி ஆர்வம் கொள்ளச் செய்யவில்லை. ஒரு காலத்திலும் அரசாங்கசேவையுட் பிரவேசியாதவர்களும், ஒருக்காலும் அச்சேவையை எதிர்பாராதவரும், விரும்பாதவருமான, பெருந்திரளான தமிழ் மக்கள் இப்பாஷைப் பிரச்சினையை எதிர்க்கமுற்பட்டிருக்கின்றனர். ஆங்கிலம் கற்ற தமிழரிலும் பார்க்க, ஆங்கிலத்தையேனும் வேறெந்தப் புறபாஷையேனும் கல்லாதவர்களே கூடிய மும்முரமாக இவ்விஷயத்தில் ஊக்கம் காட்டுகின்றனர்.

இதிகாசப்படி வெற்றி ஓர் இரவில் நிறைவேறியதில்லை. இம்மசோதாவைக் கொண்டு வராது விடுதல் பல சமூகத்தினரையும், தொழிலாளிகளையும் ஒன்றுபடுத்திவிடும். நீங்கள் அங்ஙனம் செய்ய விரும்பாவிடினும் தமிழ்ச் சிங்களப் பொது மக்களாகிய நாமனைவரும் நமது கூட்டு விவாதத்தையிட்டு வெற்றி பெறும வரையில் ஏகமனத்தினராய்ப் போராடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

B/T/2010


தவறாது

படியுங்கள்

# தேசாபிமானி

(முற்போக்கு தமிழ் வார இதழ்)

* இலங்கை கமயூனிஸ்ட் கட்சியின் அன்றாட போராட்ட வேலைகளை அறிய
* இலங்கை முற்போக்கு சக்திகளின் சாதனைகளை தெரிய
* எம். இ. பி. ஆட்சியின் தில்லுமுல்லுகளை விளக்கமாக படித்துணர

ஒவ்வொரு வாரமும் தேசாபிமானியை

தவறாது படியுங்கள்

விலை சதம்–10

வருட சந்தா ரூ. 6/- ஆறு மாத சந்தா ரூ. 3/-

விபரங்கள் அறிய:—

மானேஜர்,

தேசாபிமானி

91, கொட்டாரோடு, கொழும்பு-8

என்ற விலாசத்திற்கு எழுதுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org